வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 5371/ஆ4/2025 நாள்: 23.01.2026

பொருள் : தேர்வுகள் –வேலூர் மாவட்டம் – தமிழ்நாடு முதலமைச்சரின் திறமைத் தேடல் தேர்வு (TNCMTSE) ஜனவரி 2026 – தேர்வு மையங்களுக்கான பெயர் பட்டியல் மற்றும் தேர்வுக் கூட நுழைவுச் சீட்டுகள் பதிவிறக்கம் செய்தல் –பள்ளிகளுக்கு தெரிவித்தல் – தொடபர்க

பார்வை : அரசு தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண். 017342/டி1/2025 நாள் 22.01.2026

===============

பார்வையில் காணும் சென்னை அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகளுக்கிணங்க தமிழ்நாடு முதலமைச்சரின் திறமைத் தேடல் தேர்வு (TAMIL NADU CHIEF MINISTERS TALENT SEARCH EXAMINATION) 31.01.2026 (சனிக்கிழமை) அன்று நடைபெறவுள்ளதை தொடர்ந்து , இத்தேர்வு எழுதவுள்ள மாணாக்கர்களின் "பெயர் " (Nominal Roll –Cum Attendance Sheet) தேர்வு மைய வாரியாக www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் தேர்வு மையமாகச் செயல்படும் பள்ளியின் User Id / Password –ஐ பயன்படுத்தி 23.01.2026 பிற்பகல் முதல் பதிவிறக்கம் செய்து கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தேர்வு மைய பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் பெயர் பட்டியலினை தவறாமல் பதிவிறக்கம் செய்துகொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். முற்பகல் மற்றும் பிற்பகலில் நடைபெறும் இரு தேர்வுகளுக்கும் ஒரே பெயர் பட்டியலைப் பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

<u>தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகள் பதிவிறக்கம் செய்தல் :</u>

தமிழ்நாடு முதலமைச்சரின் திறமைத் தேடல் தேர்வு தேர்விற்கான தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை 23.01.2026 பிற்பகல் முதல் பள்ளித் தலைமையாசிரியர்கள் www.dge.tn.gov.in என்ற இணையதளம் மூலம் தங்கள் பள்ளிக்கான User ID /Password –ஐ கொண்டு பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு வழங்கவும், தேர்வு மைய விவரத்தினை மாணவர்களுக்கு தெரிவிக்கவும் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு தெரிவிக்கப்பபடுகிறது.

தேர்வுகூட நுழைவுச் சீட்டினை அனைத்து பள்ளித் தலைமை ஆசிரியர்களும் பதிவிறக்கம் செய்து மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டதை மாவட்டக் கல்வி அலுவலர் (இடைநிலை /தொடக்ககல்வி) உறுதி செய்து அவ்விவரத்தினை 28.01.2026–க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பிட கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

தேர்வர்களின் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளில் மாணவரின் பெயர் / பிறந்ததேதி, இனம் ஆகியவற்றில் திருத்தம் ஏதும் இருப்பின், சிவப்பு நிற மையினால் பிழையினை சுழித்து சரியான திருத்தப் பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

புகைப்படத்தில் திருத்தங்கள் ஏதேனும் இருப்பின் தேர்வரின் புதிய புகைப்படத்தை உரிய இடத்தில் ஒட்டி சம்பந்தப்பட்ட அரசு மேல்நிலை/உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர் சான்றொப்பமிட்டு (பள்ளி முத்திரையுடன்) தேர்வர்களுக்கு வழங்க வேண்டும். மேலும், ஒரு புகைப்படத்தை சம்பந்தப்பட்ட தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என சார்ந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

//ஓம். //
முதன்மைக்கல்விஅலுவலர்,
வேலூர்

பெறுநர்:

அனைத்து அரசு /நகரவை /ஆதிதிராவிடர் நல உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள்,வே.மா.

நகல்

- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(இடைநிலை)அவர்களுக்கு தொடர்நடவடிக்கையின் பொருட்டு அனுபிவைக்கப்படுகிறது.
- வேலூர் மாவட்டக் கல்வி அலுவலர்(தனியார் பள்ளிகள் /தொடக்கக்கல்வி) அவர்களுக்கு தகவலின் பொருட்டு அனுப்பிவைக்கப்படுகிறது.